<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**OS.No: 199/2024** **நாள் 29.06.2026**

**வாசா.3, திரு.ராஜேந்திரன்**

**வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

பிராது சொத்தானது வாதியின் தம்பியான மீனாட்சிசுந்தரம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவர் வங்கியில் கடன் வாங்கியிருந்தார் அவரால் கடன் தொகையை செலுத்த முடியவில்லை. பிராது சொத்தை பொறுத்து வங்கியானது ஏலத்திற்கு கொண்டுவந்தது. மேற்படி சொத்தானதை வழக்கின் எதிர்வாதியான சுப்பையாபாண்டி என்பவர் தான் ஏலத்திற்கு எடுத்தார். மீனாட்சி சுந்தரம் என்பவருக்கு அந்த ஒரு வீடு தவிர வேறு வீடு எதுவும் சொந்தமாக கிடையாது. அதனால் வீடு தனக்கு வேண்டும்என்று எதிர்வாதியிடம் மீனாட்சி சுந்தரம் கேட்டாரா என்றால் அப்படியில்லை வாதி தான் கேட்டார். மீனாட்சி சுந்தரம் இந்த வீட்டை வாங்குவதற்காக வேண்டி சுப்பையாபாண்டி என்பவருடன் ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2022ம் ஆண்டு முதல் இன்று வரையிலும் அந்த வீட்டில் மீனாட்சி சுந்தரம் என்பவர் அந்த கிரைய ஒப்பந்தம் படி தான் தான் குடியிருந்து வருகிறார் என்றால் ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது ஆனால் அவர் அந்த வீட்டில் குடியுள்ளார். மீனாட்சி சுந்தரமும் வாதியும் உடன்பிறந்தவர்கள். மீனாட்சி சுந்தரம் வீட்டை கிரையம் வாங்குவதற்காக வேண்டி வாதியானவர் வெளியில் ரூ.10 லட்சத்தை கடனாக வாங்கி மீனாட்சி சுந்தரம் என்பவரிடம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீனாட்சி சுந்தரம் ரூ.10 லட்சம் கேட்டு கொடுக்க முடியாத காரணத்தினால் தான் வாதியானவர் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றதில் அவரிடம் பணம் வசதி இருப்பதால் தான் இந்த கிரையம் ஒப்பந்தம் மோசடியாக போடப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாசாஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கண்ட பிரதிவாதி சுப்பையா பாண்டியன் என்பரின் கையொப்பமும் , சொத்துக்குரிய கிரைய ஆவணத்தின் நகலில் உள்ள கையொப்பமும் வித்தியாசமாக உள்ளதாக நான் சொன்னேனா என்று கேட்டால் சொல்லவில்லை. உண்மையில் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டிருந்தால் நான் கையொப்பங்கள் வித்தியாசமாக உள்ளதாக சொல்லியிருப்பேன் என்றும் கிரைய ஒப்பந்த ஆவணம் எதுவும் ஏற்படவில்லை என்றால் அப்படியில்லை. வாதியானவர் தற்போது வரையிலும் கஷ்டப்பட்டு தான் உள்ளார் என்று சொன்னால் எதிர்வாதிக்கு அவர் ரூ.10 லட்சம் கொடுத்ததால் தான் கஷ்டத்தில் உள்ளார். எதிர்வாதிக்கு தொகை ரூ.10 லட்சத்தை வாதியானவர் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் ஆசிரியராக பணிபுரிந்தேன். எனக்கு வாதியானவர் உடன் பிறந்தவர் அல்ல . முறைக்கு தம்பி ஆவார். அதனால் தான் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. தொகை ரூ.10 லட்சம் கொடுக்கும் போது நான் உடனிருந்தேன். வாதிக்கு சொத்தானதை கிரையம் வாங்கும் அளவிற்கு போதுமான

**பணம் வசதி இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் என் முதல் விசாரணை சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 29th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.